# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 2

## 2021, மே 12, புதன்கிழமை

## பிலவ, சித்திரை 29, திருவள்ளுவர் ஆண்டு - 2052

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை **12.5.2021** ( புதன்கிழமை ) அன்று முற்பகல் 10.00 மணிக்கு மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர், திரு. கு. பிச்சாண்டி அவர்கள் தலைமையில் கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:—

" கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி "

(கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசுதல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்குப் போன்றவர் ஆவார்.)

**1.** பற்றுறுதிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எவரேனும் வருகை புரிந்திருப்பின் முறைப்படி எடுத்துக் கொள்ளலாம் என மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் கேட்டுக் கொண்டார் அவ்வாறு எவரும் வருகை புரியவில்லை.

### 2. பேரவைத் தலைவர் தேர்தல்

பேரவைத் தலைவர் தேர்தல் பதவிக்கான வேட்புத்தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சமர்பிக்கப்பட்டது குறித்தும், சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4—ன்படி பேரவைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பட்டவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | — | திரு. மு. அப்பாவு |
| முன்மொழிந்தவர் | — | மாண்புமிகு திரு. மு. க. ஸ்டாலின்,<br>முதலமைச்சர் |
| வழிமொழிந்தவர் | — | மாண்புமிகு திரு. துரைமுருகன்,<br>நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் |

பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. மு. அப்பாவு அவர்கள் மட்டும் நியமனம் செய்து வேட்புத்தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. மு. அப்பாவு அவர்கள் பேரவையின் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

பேரவையின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. மு. அப்பாவு அவர்களுக்கு தனது பாராட்டுதல்களை மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும் அழைத்து வந்து பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்தனர்.

### 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் பதவிக்கான வேட்புத்தாள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டது குறித்தும், பேரவை விதி 8, உள்விதி 2—ன்படி பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்யப்பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோர்களின் பெயர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

| | | |
|---|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | — | திரு. கு. பிச்சாண்டி |
| முன்மொழிந்தவர் | — | மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்,<br>முதலமைச்சர் |
| வழிமொழிந்தவர் | — | மாண்புமிகு திரு. துரைமுருகன்,<br>நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் |

..2

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. கு. பிச்சாண்டி அவர்கள் மட்டும் நியமனம் செய்து வேட்புத்தாள் பெறப்பட்டுள்ளதால் திரு. கு. பிச்சாண்டி அவர்கள் பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேரவைக்கு அறிவித்தார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. ஜி.கே. மணி, திரு. நயினார் நாகேந்திரன், திரு. சிந்தனை செல்வன், டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. வி.பி. நாகைமாலி, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. தி. வேல்முருகன், திரு. மு. ஜெகன்மூர்த்தி ஆகியோர் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவர் ஏற்புரை வழங்கினார்கள்.

## 4. பேரவையை ஒத்திவைக்கும் தீர்மானம்

சட்டமன்றப் பேரவை விதி 25 (1) இன்படி பேரவை, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப் பெறலாம் என்னும் தீர்மானத்தை மாண்புமிகு பேரவை முன்னர் அவர்கள் முன்மொழிந்தார்கள்.

மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பேரவை நண்பகல் 12.00 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது.

**கி. சீனிவாசன்,**
**செயலாளர்.**